0 22

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2023

**SNP8247/SNP8237– புனர்வாழ்வும் சமூதாய அடிப்படையிலான புனர்நிர்மாணமும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 17.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) 1980 ஆம் ஆண்டில் அங்கவீனமுற்றோர் என்ற பதத்தை எவ்வாறு வரையறுத்துள்ளது என்பதை விளக்குக.
2. இயலாமைக்கான சமூக மாதிரியில் நீங்கள் அவதானித்த ஐந்து (05) பண்புகளைக் குறிப்பிடுக.
3. இயலாமை பற்றி சமூதாயத்தில் காணப்படும் பொதுவான ஐந்து (05) பாரம்பரிய சிந்தனைகளை பட்டியற்படுத்துக.
4. மருத்துவ மாதிரியில் இயலாமையுள்ள குழந்தை எவ்வாறு நோக்கப்படுகின்றார்கள் என்பதை ஐந்து (05) பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.
5. இலங்கையில் இயலாமைகள் உள்ள குழந்தைகளைப் பாதிக்கும் நான்கு (04) சட்ட ஏற்பாடுகளைப் பட்டியலிட்டு, ஒரு (01) சட்டத்தை உதாரணத்துடன் விளக்குக.
6. விசேட தேவைகள்சார் கல்விக்கு முக்கியத்துவமளிக்கும் ஐந்து (05) சர்வதேச பிரகடனம் மற்றும் மாநாடுகளைக் குறிப்பிடுக.
7. இயலாமைகளையுடைய தனிநபர்களுக்கான கல்விச் சட்டத்தின் ஆறு (06) கோட்பாடுகளைக் கூறி, ஒவ்வொரு கொள்கையின் அவசியங்களையும் விளக்குக.
8. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தில் இயலாமையுடையோர்களை மேம்படுத்துவதற்கான ஐந்து (05) அணுகுமுறைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** "சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு" என்ற பதத்தை உங்கள் சொந்த மொழிநடையில் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** ஒரு நிலையான சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான படிகளை பகுப்பாய்வு செய்க. **(05 புள்ளிகள்)**

**iii.** பொருத்தமான உதாரணங்களுடன் நடைமுறையிலுள்ள இலங்கையின் சூழலுக்கு ஏற்ற சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தை எவ்வாறு திட்டமிடுவீர்கள் என்பதை ஆக்கபூர்வமாக முன்வைக்குக. **(10 புள்ளிகள்)**

10.

i. இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயம் (United Nations Convention on the Rights of Persons with Disabilities) இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் மற்றும் கௌரவத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் நிலைமையில் இயலாமையுடைய நபர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் முதல் மூன்று (03) சரத்துக்களின் நோக்கம், வரைவிலக்கணம் மற்றும் பொதுக் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்க.

**(06 புள்ளிகள்)**

ii. மேற்கூறிய சமவாயத்தின் சரத்து 24இன் அரச தரப்பினர் எவ்வாறு இயலாமையுடையோரின் கல்வியை உறுதி செய்துள்ளது என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. மேலே உள்ள சரத்து எண் 24 தொடர்பான இலங்கையில் அடையாளம் காணக்கூடிய பிரச்சினைகளை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க. **(08 புள்ளிகள்)**

11.

i. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் சமூகத்தின் பங்கு என்ன என்பதை விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் புனர்வாழ்வில், குடும்பத்தின் பங்கை ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

iii. சமூக பங்கேற்பின் முக்கிய பண்பியல்புகளை எடுத்துக்காட்டுக்களுடன் மதிப்பீடு செய்க.
**(08 புள்ளிகள்)**

12.

i. புனர்வாழ்வு மற்றும் வாழ்வழித்தல் ஆகியவற்றின் வேறுபாட்டை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

ii. செயல்பாட்டுச் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கும், புனர்வாழ்வு பெறும் நபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட தலையீடுகள் அல்லது நுட்பங்களை உதாரணங்கள் முன்வைத்து விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. சமூகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் எதிர்மறையாக மனப்பான்மையில் ஏற்படும் பிரச்சினைகளை வெற்றிகொள்ள நான்கு (04) வழிகளைப் பரிந்துரை செய்க. (08 புள்ளிகள்)

13.

i. இயலாமையுடையோருக்கான அமைப்பு என்றால் என்ன?
இயலாமையுடையோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அதன் பொறுப்புக்கள் மற்றும் பணி செயல்முறைகளை விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

ii. சுய உதவி குழுக்களை (SHGs) அதன் ஐந்து (05) பண்புகளை முன்வைத்து விளக்குக.

**(05 புள்ளிகள்)**

iii. இயலாமைகளையுடைய நபல்களின் புனர்வாழ்வுச் செயல்முறையின் அரசியலில் பங்கேற்பின் நீண்ட கால விளைவுகள் நான்கு (04) இனை எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

14.

**i.** இயலாமைகளையுடைய தனிநபர்களுக்கான கல்விச் சட்டம் மற்றும் அமெரிக்காவின் 1973 ஆம் ஆண்டின் புனர்வாழ்வுச் சட்டத்தின் பிரிவு 504 இன் கீழ் சேவைகளைப் பெறுதல் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் புனர்வாழ்வுச் சட்டம் 1973 இன் பிரிவு நான்கு 504இன் மூன்று (03) முக்கியத்துவத்தை விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** இயலாமைகளையுடைய குழந்தைகளின் புனர்வாழ்வில் பாடசாலையின் பங்கை ஆராய்க. **(05 புள்ளிகள்)**

**iii.** இயலாமைகளையுடைய குழந்தைகளின் புனர்வாழ்வில் சாதாரண வகுப்பறை ஆசிரியரின் பங்கை மதிப்பிடுக. **(8 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*